# தெஹியத்தகண்டி பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியத்தகண்டி பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கடை வாடகையில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 52,500 தொகையான கடை வாடகை உள்ளடங்கியிருந்தமையால், மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய சம்பள மீளளிப்பில் உள்ளடக்கப்பட்ட உறுப்பினர் படிகளான ரூபா 111,500 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகப் பதிவு செய்யப்படாமையால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணத்தில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 11,400 நிலுவை வியாபார அனுமதிப்பத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் அப் பெறுமானத்தின் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 சனவரி 23 ஆந் திகதி செலுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்குரிய சம்பளம், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மற்றும் குத்தகை வாடகை செலுத்துவதற்கான முத்திரைக் கட்டணம் ரூபா 51,170 தொகை, மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்படாமையால், ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 சனவரி 10 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட தெஹிஅத்தகண்டி குழுமம் பம்பிக் கூடத்தை செயற்படுத்துவதற்காக 2013 நவம்பர் மாத படி ரூபா 63,238 தொகை, மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மணிக்கூட்டுக் கோபுரத்தை பராமரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 25,000 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 127,733 பெறுமதியான பிரதேச களஞ்சிய இருப்புக்கள், இயந்திர உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக, இயந்திர உப கணக்கின் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களினதும் வேலை பதிவேட்டினதும் பிரகாரம் 2013 சனவரி 01 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 592,934 தொகையான செலுத்த வேண்டிய 09 மீதிகள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபையினால் கையொப்பமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொங்கிரீட் சிறு கற்கள் பயன்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டதன் பெறுமதி ரூபா 12,734,662 தொகையான 26 வீதிகளுக்குரிய பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வேலைக் கடன்பட்டோர் மற்றும் வேலைக் கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டமையினால் ரூபா 96,638,216 கூட்டுத்தெொகயான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,677,272 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,777,905 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------- | -------------- | -------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 1,505,000 | 931,326 | 1,441,121 |
| (ii) | வாடகை | 2,853,750 | 3,261,752 | 50,650 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,049,012 | 1,275,099 | 51,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 465,000 | 713,448 | 791,615 |

### 2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரத் தரப்பினரினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 689,500 தொகையான நீதி மன்றத் தண்டப்பணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான 02 கெப் வண்டிகள், ஒரு முச்சக்கர வண்டி, 02 கொங்கிரீட் கலவை இயந்திரங்கள் மற்றும் ஒரு வீதிச் செப்பனிடுகை மீளாய்வாண்டின் போது விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.2 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து ரூபா 13,024,205 தொகை மற்றும் கடன்பட்டோர் கணக்கில் ரூபா 22,857,268 தொகை என்பன அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3.3 உள்ளகக் கணக்காய்வு

---

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் சபையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) வாகனப் பயன்பாடு